புலம் மெய்ப்பொருள் காண்பது அறிவு
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் – காலாண்டிதழ்
PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY
To Discern the Truth is Wisdom– Quarterly Journal
Vol.1: Issue – 1, April – 2021 Read at: www.pulamejournal.com

# தமிழில் உருவகப் பழமொழிகள்

## Metaphorical proverbs in Tamil

**முனைவர் ஆ.முத்தையன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (பி-2), தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635601.

**Dr. A.Muthaiyan,** Assistant Professor, Department of Tamil (B-2), Sacred Heart College, Tirupattur - 01

### Abstract

Proverbs are experienced words uttered by our ancestors to channelize the younger generation. There are two types of proverbs 1) direct proverbs, 2) metaphorical proverbs. Both types of proverbs delivers the meaning based upon the time and situation in which it has been uttered. Metaphorical proverbs might be originated in different manner, but when the person conceives and conveys the same, it could create a different effect on the listener. The metaphorical proverbs creates changed amidst the listener. Till now, researches based on metaphorical proverbs is carried out a little, and we try to work on this title at this juncture. To identify some of the metaphorical proverbs related to ancestral Tamil community , and the effects that has been created amidst the people and to carry out a research on the structural and conceptualization of such proverbs are the paradigm of current work.

### ஆய்வுச்சுருக்கம்

பழமொழிகள் என்பவை மக்களின் அனுபவ ஊற்றேயாகும். அப்பழமொழிகளை இரண்டு வகையாகப் பிரிப்பர். 1.நேரடிப் பழமொழிகள் 2. உருவகப் பழமொழிகள் என்பர். இரண்டிற்குமான பொருள் உற்பத்தி என்பது அவை வெளியாகும் சூழலை அடிப்படையாகக் கொண்டே அமையும். உருவகப் பழமொழி என்று குறிப்பிடுவதற்கான காரணம் ஒரு பழமொழி வெளியாகும் சூழல் ஒன்றாக இருக்கும். சொல்வோர் அதனை உள்வாங்கி பழமொழியாக வெளிப்படுத்தும்போது உருவான புனைவு அனுபவம் வேறொன்றாக இருக்கும். அப்படிப்பட்ட உருவகப் பழமொழிகள் கேட்போர் மத்தியில் சில விளைவுகளை அல்லது மாற்றங்களை உருவாக்கிச் செல்கின்றன. எனவே இதுவரை சூழலடிப்படையிலான பழமொழிகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் அதிகம் வெளியாகாத சூழலில் இக்கட்டுரையானது தமிழ்ச் சமூகத்தில்

புழக்கத்தில் உள்ள சில உருவகப் பழமொழிகளைச் சூழலோடு அடையாளப்படுத்துவதையும் அவற்றால் உண்டான விளைவுகளை அடையாளப்படுத்துவதையும் அப்பழமொழிகளை அமைப்பியல் ஆய்விற்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

**Keywords :** உருவகம், பழமொழிகள், சூழலியற் பழமொழிகள்

பழமொழிகள் என்பவை மக்களின் அனுபவச் சான்றுகளாகும். அது நேரடிப் பழமொழிகளாகவும் உருவகப் பொருளிலும் வருவதுண்டு. நேரடிப் பொருளில் வருவதைவிட உருவகப் பழமொழிகளாக வருவது என்பது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஒருமுறை வகுப்பறையில் ஆய்வாளர் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது ஒரு மாணவி பக்கத்தில் இருக்கும் இன்னொரு மாணவியிடம் பேசிக்கொண்டு இருந்தார். அவர்மீது ஆய்வாளராகிய ஆசிரியருக்கு எந்தவிதமான குரோதமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மாணவிக்குப் பிடித்தமான ஆசிரியரும்கூட. இருப்பினும் அவருடைய செயலைச் சுட்டிக்காட்ட விரும்பியவர் மாணவியைப் பார்த்து,

**“மேயறமாட்ட நக்கற மாடு கெடுத்துச்சாம்”**

என்றார். உடனே மாணவி முகத்தை சோகமாக (அ) கோபமாக வைத்துக்கொண்டு பேசாமல் இருக்க, மற்ற மாணவர்கள் ஆசிரியர் கூறியப் பழமொழியினைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தனர். வருத்தம் தோய்ந்த முகத்தோடு இருந்த மாணவியைப் பார்த்துப் பேசிய ஆசிரியர் ‘தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்பா.. பழமொழியைப் பயன்படுத்தும் சூழல் குறித்து அறிவுறுத்தவே இந்தப் பழமொழியை உங்களைப் பார்த்துக் கூறினேன்’ என்றார். அவர் கூறியப் பழமொழியைக் கேட்ட மாணவி ஆசிரியரோடும் அவருடைய வகுப்பில் உள்ள மாணவிகளோடும் இரண்டு நாட்கள் பேசவேயில்லை. இரண்டு நாட்கள் இதைக் கவனித்த ஆசிரியர் மூன்றாம் நாள் நாட்டுப்புறவியல் வகுப்பில் பழமொழியின் இன்றியமையாமைப் பற்றி இப்போது புரிகிறதா? சூழல்தான் பழமொழிக்கான பொருள் உற்பத்தியாகும். அவை பயன்படுத்தும் சூழலைக் கொண்டுதான் அவற்றிற்கான பொருள் உற்பத்திச் செய்யப்படும் என்பதை மாணவியின் செயலைச் சுட்டிக்காட்டி வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார். அந்தவகையில் உருவகப் பழமொழிகள் என்பவை மிகவும் நுண்ணிய அளவில் வினையாற்றுகிறது என்பதை விளங்கிக்கொள்ளலாம். இந்நுண்ணிய கூறுடையப் பழமொழிகளே சமூகத்தில் பெருமளவில் அறம் போதிக்கும் நிறவனமாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. எனவேதான் மக்கள் இன்றளவும் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்காதவர்களாக, உணர்வுகளுக்கு

புலம் செய்ப்பொருள் காண்ப தறிவு
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் – காலாண்டிதழ்
PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY
To Discern the Truth is Wisdom– Quarterly Journal
Vol.1: Issue – 1, April – 2021 Read at: www.pulamejournal.com

மதிப்பளிக்கக் கூடியவர்களாக இருக்க காரணம் என்று கருதுகிறேன். அந்தவகையில் இக்கட்டுரையும் மேலும் சில உருவகப் பழமொழிகளைச் சூழல் அடிப்படையில் முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

ஒருநாள் மாணவி (த.புவனா) ஒருத்தி நூறுநாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலைக்குச் சென்றிருக்கிறார். தென்னந்தோப்பு ஏரியில் மதியம் 3 மணியளவில் அவளது பெரியம்மாள், கூட வேலை செய்யும் பெண்கள் குசுகுசுவென்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து கோபமாக,

**வித்தை விக்கிதா கடையில**
**வீங்கிக்கிச்சா தொடையில...** (K.காந்தா, 60, சீரங்கப்பட்டி, திருப்பத்தூர்)

என்ற பழமொழியினைக் கூறினாராம். அதாவது அவர்கள் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டிருந்தபோது நீங்க ரொம்ப நல்லவங்க மாதிரி மத்தவங்களைக் குறை சொல்லுகிறீர்களே என்று கேட்கும்விதமாக இந்தப் பழமொழி கூறப்பட்டது என்கிறார். இப்பழமொழியினைக் கேட்ட அனைவரும் அமைதியாக இருந்தார்களாம். இப்பழமொழியைக் கேட்ட மாணவிக்கு 'முதலில் நாம் சரியானவர்களா என்று யோசித்து பார்க்க வேண்டுமென்றும் பிறகுதான் மற்றவர்களைக் குறை சொல்ல வேண்டும் என்றும் தோன்றியதாகக்' குறிப்பிட்டார்.

அது போன்றே தென்னந்தோப்பில் மதியம் 2 மணியளவில் வேலை செய்து கொண்டிருந்த பெண்ணொருத்தி 'நான்தான் உத்தமி, நான்தான் பத்தினி, நான்தான் நியாயமானவள்' என்று கூறியதைக் கேட்ட மாணவியின் பெரியம்மாள்,

**மானாபத்தினி மானாபத்தினி மானம் பத்திக்குச்சா**
**திரும்பி பார்த்த திருவண்ணாமலை திக்குனு பத்திக்குச்சா**
**அணைக்கப்போன ஆம்பளைக்கு தாடி பத்திக்குச்சாம்** (K.காந்தா, 60, சீரங்கப்பட்டி, திருப்பத்தூர்)

என்றார். அதாவது 'ஊரில் இருக்க ஒரு ஆம்பளையைக் கூட விட மாட்டீங்கற நீ பத்தினி என்று சொல்லுகிறாயா' என்று அவள் நியாயமானவள் இல்லை என்பதை மறைமுகமாக இடித்துரைப்பதற்கு இப்பழமொழியினைக் கூறினாராம். அதைக்கேட்ட மாணவிக்கு நான் மட்டும்தான் நல்லவள், நியாயமானவள் என்று எப்பொழுதும் பெருமை கொள்ளக் கூடாது என்று உணர்த்தியதாகக் கூறினார்.

ஒருநாள் மதியம் 12 மணிக்குத் தெருவில் நின்றிருந்த த.புவனாவின் அக்கா அவருடைய அப்பாவிடம் சிரித்து மகிழ்வாக உரையாடிக் கொண்டிருந்திருக்கிறார். அப்பா சென்றவுடன் அங்கு

வந்த பெரியம்மாளிடம் அதே அக்கா கோபமாகப் பேசியிருக்கிறார். அதனைக் கண்ட பெரியம்மாள் கோபப்பட்டு,

**இங்கே தலை காட்டுகிறான்**

**அங்கே வால் காட்டுகிறான்** (K.காந்தா, 60, சீரங்கப்பட்டி, திருப்பத்தூர்)

என்றவுடன் அக்காவின் முகம் மாறி அங்கிருந்து கிளம்பிவிட்டாராம். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த புவனாவிற்கு அனைவரிடமும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்று தோன்றியதாகக் கூறினார். புவனா கல்லூரியில் நடந்த பேச்சுப்போட்டியில் கலந்துகொள்ள மாட்டேன் என்று வீட்டு வாசலில் மாலை 5 மணிக்கு அவருடைய அப்பாவிடம் கூறியிருக்கிறார். அதற்கு அவருடைய அப்பா,

**காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்** (தமிழ்ச்செல்வன், 42, சீரங்கப்பட்டி, திருப்பத்தூர்)

என்று சொல்லியவுடன் அமைதியாக இருந்த புவனா பிறகு பார்க்கலாம் என்று அங்கிருந்து வீட்டிற்குள் சென்றுவிட்டாராம். அவருடைய அப்பாவும் அமைதியாகிவிட்டாராம்.

ஒருநாள் மாலை 5 மணிக்கு புவனாவின் அக்கா கைப்பேசியைப் பயன்படுத்திக் கொண்டிருந்தாராம். அதனைப் பார்த்த அவருடைய பாட்டி,

**அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு** (முனியம்மாள், 50, சீரங்கப்பட்டி, திருப்பத்தூர்)

என்று கூறக்கேட்ட அக்கா கோபமாக வீட்டிற்குள் சென்றுவிட்டாராம். பிறகு பாட்டியிடம் பேசவேயில்லை. பாட்டியும் திட்டிவிட்டுச் சென்றுவிட்டார் என்கிறார் புவனா.

ஒருநாள் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் வகுப்பறையில் மதியம் 3.50 மணிக்கு வரைவு கடாவுதலைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தாராம். அப்பொழுது காதல் வாழ்வைப் பற்றிப் பேசிய அவர்,

**அவனுக்கென்ன ஆம்பள வெங்கலம் வெளக்கியெடுத்துடுவான்** (தி.அ.ரமேஷ், 35, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி)

காதலித்தால் பெண்களுக்குத்தான் பிரச்சனை உண்டாகும். ஆண்களுக்கு அவ்வாறு இல்லை. துடைத்து எறிந்துவிடுவார்கள் என்று வரைவு கடாவுதலின் விரி பற்றி நடத்தும்போது இப்பழமொழியினைக் கூறினாராம். ஆ.ஐஸ்வர்யாவும் அருகில் இருந்த மாணவிகள் அனைவரும் அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்வதைப்போல தங்களுடைய அமைதியினால் ஒருத்தர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனராம்.

புலம் மெய்ப்பொருள் காண்பது அறிவு
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் – காலாண்டிதழ்
PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY
To Discern the Truth is Wisdom– Quarterly Journal
Vol.1: Issue – 1, April – 2021 Read at: www.pulamejournal.com

இளங்கலை இறுதி ஆண்டு மாணவர்களோடு பேசிய பேராசிரியர் தி.அ.ரமேஷ் அவர்கள், 'வகுப்புத் தேர்வில் பார்த்து எழுதவில்லையா?' என்று ஒரு மாணவரிடம் வினவியபோது 'இல்லை' என்றாராம். உடனே முகத்தை சந்தேகக் கோணத்தோடு வைத்திருந்தவர்,

**மொசப்புடிக்கிற நாய மூஞ்சிய பார்த்தா தெரியாது?** (தி.அ.ரமேஷ், 35, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி)

என்றாராம். அம்மாணவரின் முகம் வாடி துயரத்தில் இருப்பதைப் போல இருந்ததாராம். மற்ற மாணவர்கள் அமைதி காத்தனர் என்று கார்வேந்தன் கூறினார்.

கார்வேந்தனும் அவரது நண்பரும் வகுப்பறையில் நடந்து முடிந்த தேர்வினைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அப்பொழுது கோகுல் என்ற நண்பர், காலநேரம் இன்மையால் தேர்வில் எளிமையான கேள்வியை எழுதியபோதும் என்னால் முழுமையாக எழுதி முடிக்க இயலவில்லை. எளிமையான கேள்வியும் கடினமாகிறது என்பதை,

**அவசரத்துல அண்டாக்குள்ள கைய விட்டாலும் கைநுழையாதாம்** (அ.கோகுல், 20, பாச்சல், திருப்பத்தூர்)

அப்படி ஆச்சு என் பொழப்பு என்றாராம். விரக்தியோடு சொல்வதைக் கேட்ட கார்வேந்தன் சொல்வதறியாமல் தவித்தாராம்.

தேர்விற்குத் தாயராகிக் கொண்டிருந்த சூழலில் மாணவர்கள் ஒருவரை ஒருவர் எள்ளி நகையாடிக் கொண்டு இருந்திருக்கின்றனர். அந்த நேரத்தில் ஒரு மாணவர் பலவிதமான எழுதுகோல்களை எடுத்துக் கொண்டு தயாராகி இருக்கிறார். அவரிடம் படித்துவிட்டாயா என்று ஒருவன் கேட்டதற்கு இல்லை என்றிருக்கிறார் அம்மாணவர். இதனைக் கேட்ட சுந்தமூர்த்தி என்பவர்,

**அறுக்க மாட்டாதவனுக்கு அம்பத்தெட்டு அறுவாளாம்** (பி.சுந்தரமூர்த்தி, 20, தேவமங்கலம், திருப்பத்தூர்)

என்றாராம். அங்குள்ள மாணவர்கள் அனைவரும் சிரித்தனராம்.

வகுப்பறையில் பேராசிரியர் ஒருவர் பாடம் எடுத்துக்கொண்டிருந்திருக்கிறார். சங்கப் பாடல்களில் உள்ள கூற்றுகளின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடும்போது, நீங்கள் கண்டுபிடித்து வாருங்கள், அப்பொழுதான் ஆர்வமும் ஈடுபாடும் உங்களுக்கு வரும். இல்லையென்றால்,

**நோகாம நோன்பு கும்பிடுறதுபோல ஆயிடும்** (இரா.சங்கர், 41, அரூர், தருமபுரி)

என்று சொல்லியிருக்கிறார். மாணவர்களும் சரிங்க ஐயா என்றனர். சிலர் சலிப்புற்றனர். சிலர் நாம எங்கப்போயி கண்டுபிடிக்கிறது என்று கூறியதாகக் கார்வேந்தன் கூறினார்.

துர்கா என்ற பெண்ணிடம் இரவு 8 மணியளவில் சுசித்ரா நலம் விசாரித்துக் கொண்டிருந்திருக்கிறார். அப்பொழுது சாப்டீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். அவரும் பதலளித்துவிட்டு எனக்கு வாய்த்திருக்கிற மருமகள் சாப்டியா இல்லையானு கூட கேட்பது இல்லை என்று விசனப்பட்டுக் கொண்டே,

**நாயக் கேட்பாரும் இல்ல**
**நடுவீட்ல வப்பாரும் இல்ல**
**ஏன்னு கேட்பாரும் இல்ல**
**எடுத்துப் பிடிப்பாரும் இல்ல** (துர்கா, 53, கீழ்வீதி, திருப்பத்தூர்)

என்று சோகமாகக் கூறினாராம். அதனைக் கேட்ட சுசித்ராவிற்கு சோகமான மனநிலை உருவானதாம். பிறகு சரி விடுங்க பாட்டி எல்லாம் சரியாயிடும். உங்களுக்கு என்ன வேணுமோ என்ன கேளுங்க.. நான் எடுத்து வந்து தரேன் என்றாராம்.

ஒருநாள் மாலை 6 மணிக்குப் பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்த குப்ரா, வேறொரு பேருந்து வரும் என வந்தப் பேருந்தை விடுத்துக் காத்திருந்த தோழியின் மனநிலையைக் கண்டு அவளை எள்ளும் பொருட்டு,

**அரசனை நம்பி புருசனை விட்ட கதையாச்சி** (குப்ரா, 20, திருப்பத்தூர்)

என்றாராம். அப்பழமொழியினைக் கேட்ட அருகிருந்த நண்பர்கள் அனைவரும் சிரித்துவிட்டனர் என்று ஸ்ரீமதி கூறினார். பேருந்திற்காகக் காத்திருந்த பெண் சிறிது வருத்தப்பட்டதோடு சிரிக்கவும் செய்தாராம்.

ஸ்ரீமதியின் அப்பா ஒருநாள் காலை 8.30 மணிக்கு சமையலைப் பற்றிக் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தாராம். அப்பொழுது திடீரென,

**வரவர மாமியார் கழுதைபோல ஆனாளாம்** (ந.நரசிம்மன், 47, பல்லலப்பள்ளி, திருப்பத்தூர்)

என்றாராம். கணவருடைய பழமொழியைக் கேட்ட அவருடைய அம்மா அமைதியாக இருந்தாராம். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீமதி உள்ளிட்ட அனைவரும் சிரித்தவுடன் அவருடைய அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டதாம். அப்பொழுது அப்பாவும் அம்மாவும் சண்டையிட்டுக் கொண்டனராம்.

புலம் செய்ப்பொருள் காண்ப தறிவு
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் – காலாண்டிதழ்
PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY
To Discern the Truth is Wisdom– Quarterly Journal
Vol.1: Issue – 1, April – 2021 Read at: www.pulamejournal.com

ஜெயசூரியா என்ற மாணவரின் ஊரைச் சார்ந்த முத்து என்பவரின் மகன் தேர்வில் முதல் மதிப்பெண் எடுக்கவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாராம். பள்ளி வளாகத்தில் அதைப் பார்த்த முத்து,

**முத்தெடுக்க வேண்டுமென்றால் மூச்சையடக்க தான் ஆகவேண்டும்** (செ.முத்து, 39, காட்டூர், திருப்பத்தூர்)

என்றாராம். சாதிக்க வேண்டுமானால் உழைக்க வேண்டும் என்ற பொருளில் சொல்லப்பட்டதாக ஜெயசூரியா கூறினார். அதனைக் கேட்ட முத்துவின் மகன் சந்தோசமடைந்து வருத்தத்திலிருந்து வெளியேறினான்.

உருவகப் பொருளில் வருகின்ற பழமொழிகளை அவற்றின் சூழலோடு காணும்போது அவை வெளிப்படும் இடத்தில் எதிர்வினை நிகழ்வதைக் காணமுடிகிறது. அதாவது 'பேசாமல் அமைதி காத்தல், குறை கூறாமலிருத்தல், தான்மட்டும் நியாயவாதி என்ற மமதையினை அழித்தல், அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்றல், கைப்பேசியை விட்டுவிட்டு அமைதியாகச் செல்லுதல், ஆண்களுக்கு எதுவுமில்லை என்றல், வருத்தப்படுதல், எள்ளுதல், சலிப்பு உண்டாகுதல், நான் இருக்கிறேன் என்றல், தவறு செய்ததாக உணர்தல், சண்டையிடுதல், கடின உழைப்பினை மேற்கொள்ள வேண்டும் என்ற உந்துதலைப் பெறுதல்' முதலான பல்வேறு எதிர்வினைகள் உருவாவதைக் காணலாம். இந்த விளைவு என்பது பழமொழிகளின் உயிர்ப்பாக இருக்கிறது. அவையே பழமொழிகளைக் காலம் கடந்தும் நிலைபெறச் செய்கிறது.

இவற்றின் அமைப்பினை ஆய்வுச் செய்யும்போது 'ஆலன் டண்டிஸ்' கூறுவதைப் போல ஒவ்வொரு பழமொழியும் (விளக்கவுரைக்கூறும்) ஒரு தலைப்பினையும் ஒரு முடிபுரையையும் கொண்டே வருகிறது. சிலவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட தலைப்பும் முடிபுரையும் வந்திருப்பதைக் காணலாம். சான்றாக,

| தலைப்பு | முடிபுரை |
|---|---|
| மானாபத்தினி மானாபத்தினி | மானம் பத்திக்குச்சா |
| திரும்பி பார்த்த | திருவண்ணாமலை திக்குனு பத்திக்குச்சா |
| அணைக்கப்போன ஆம்பளைக்கு | தாடி பத்திக்குச்சாம் |
| இங்கே | தலை காட்டுகிறான் |
| அங்கே | வால் காட்டுகிறான் |
| நாயக் கேட்பாரும் | இல்ல |
| நடுவீட்ல வப்பாரும் | இல்ல |

புலம் செய்ப்பொருள் காண்பு தறிவு
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் – காலாண்டிதழ்
PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY
To Discern the Truth is Wisdom– Quarterly Journal
Vol.1: Issue – 1, April – 2021 Read at: www.pulamejournal.com

| | |
|---|---|
| ஏன்னு கேட்பாரும் | இல்ல |
| எடுத்துப் பிடிப்பாரும் | இல்ல |

மேற்கண்ட மூன்று பழமொழிகளிலும் ஒன்றிற்கு மேற்பட்ட தலைப்புகளும் முடிபுரைகளும் வந்துள்ளன. ஆனால் அவை ஒவ்வொன்றும் தன்னளவில் முரண்பட்டு வந்திருப்பதைக் காணலாம். இந்த முரண் தன்மைகளால்தான் கேட்பவரிடையே விளைவினை உண்டாக்க முடிந்திருக்கிறது. முதல் பழமொழியில் பத்தினி x திரும்பிப் பார்த்தால் x ஆம்பளை என்கிற வெவ்வேறான தலைப்புகளும் அவற்றிற்கான முடிபில் ஒத்த தன்மையில் ஆனால் வெவ்வேறு பொருட்கள் பற்றிக்கொண்டதுமாக வருகிறது. ஆகையால் அங்குக் கோபம் வருவதையும் அமைதி சூழல் உருவாவதையும் பார்க்கமுடிகிறது. இரண்டாவதில் இங்கே x அங்கே என்ற தலைப்புகளும் தலை காட்டுகிறான் x வால் காட்டுகிறான் என்று இரண்டும் முரணாக வருகிறது. இங்கும் **'உள்ளதைச் சொல்லிவிட்டால் உப்பெரிச்சல்'** என்பதைப் போன்று கோபமும் அமைதியும் உருவாகிறது. மூன்றாவது பழமொழியில் தலைப்புகள் நான்கும் முரணாகவும் (நாயக் கேட்பாரும் x நடுவீட்ல வப்பாரும் x ஏன்னு கேட்பாரும் x எடுத்துப் பிடிப்பாரும்) முடிபுகள் நான்கும் (இல்ல) ஒரே பதிலைக் கொண்டு வந்திருக்கிறது. அதனால் எதிரில் இப்பழமொழியினைக் கேட்பவர் மத்தியில் அன்பும் ஆதரவுமான சூழல் உருவாகிறது. இவ்வாறு முரண்களால் உருவாக்கப்பட்ட பழமொழிகள் சுட்டிக்காட்டும் அறம் என்பது மிக நேர்த்தியாக இருக்கிறது. முரண்தன்மை கொண்ட பழமொழிகள் தன்னிலைகளின் தவறுகளைச் சாடி திருத்தும் வகையிலும் நேர்மறையான எண்ணங்களை உருவாக்கவும் பயன்படுவதை அறியமுடிகிறது.

**துணை நின்றவை**

1. தே.லூர்து, தமிழ்ப் பழமொழிகள் : அமைப்பு, பொருண்மை, செயல்பாடு, 2007.
2. தே.லூர்து, நாட்டார்வழக்காற்றியல் ஓர் அறிமுகம், 1976.
3. தே.லூர்து, பழமொழியியல், 2005.
4. தே.லூர்து, சூழலியம் பழமொழிகளை முன்வைத்து, 2008.
5. ஆ.முத்தையன், தமிழக கர்நாடக எல்லைகளில் தமிழ் கன்னடப் பழமொழிகள் – ஓர் ஒப்பீட்டாய்வு, 2014.

புலம் செய்ப்பொருள் காண்ப தறிவு
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் – காலாண்டிதழ்
PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY
To Discern the Truth is Wisdom– Quarterly Journal
Vol.1: Issue – 1, April – 2021 Read at: www.pulamejournal.com

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முத்தையன், ஆ. " தமிழில் உருவகப் பழமொழிகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 1, ஏப்ரல் 2021, பக். 31-39

**Cite this Article in English**

**Muthaiyan, A. " Metaphorical proverbs in Tamil"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 1, April 2021, pp. 31-39